# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 72/மா/2023**

**நாள் : 21.06.2023**

| | | |
|---|---|---|
| திரு. R. மணிகண்டன்,<br>கரூர். | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>கரூர் மாநகராட்சி, கரூர். | – | எதிர்மனுதாரர் |

கரூர், தாந்தோன்றிமலை, பாரதிதாசன் நகர், நான்காவது தெரு, கதவுஎண்.69I/7E4, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R. மணிகண்டன் என்பவரின் 20.03.2023 நாளிட்ட மனு, 21.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 72/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கரூர், தாந்தோன்றிமலை, பாரதிதாசன் நகர், நான்காவது தெரு, கதவுஎண்.69I/7E4, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.மணிகண்டன் என்பவர் தனது 20.03.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" கரூர் மாநகராட்சியில் உள்ள 19 வது வார்டில்,Chinna Andan Kovil Road, MGR Nagar, Gowripuram பகுதியில் 40 அடி அகலமுள்ள கிழக்கு மற்றும் மேற்கு ரோட்டினை பல நபர்கள் சுமார் 10 அடி அகலமுள்ள மாநகராட்சி இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். ஆக்கிரமிப்புகளை, தமிழ்நாடு நகர உள்ளாட்சி சட்டத்தின்படி, அகற்ற கோரி, நானும் எனது தாயுமான R. ரெத்தினம் என்பவரும் பலமுறை புகார்அளித்தும் மாநகராட்சி ஆணையர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கே.எம்.வேலுச்சாமி என்ற நபர் கரூர் வருமான வரித்துறை அலுவலகம் அருகே சுமார் 9 அடி அளவுள்ள மாநகராட்சி சாலையை ஆக்கிரமிப்பு செய்து அதில் ஹோட்டல் கடையை வாடகைக்கு நடத்துவதோடு மட்டுமல்லாமல், மேலும் அந்த இடத்தின் உரிமையாளர், குறிப்பிட்ட ஹோட்டல் கடைக்கு உண்டான எவ்வித முறையான கட்டிட (Building Plan Approval) மற்றும் வரைபட (Layout Approval) மற்றும், தீயணைப்பு துறையின் தடையில்லா சான்று (No objection certificate) அனுமதி பெறாமலும் மற்றும் ஹோட்டல் கடைக்கு உண்டான வணிக சொத்து வரி (commercial property tax) ஆகியவற்றை மறைத்து மாநகராட்சிக்கு உரிய வரி செலுத்தாமல் கடந்த 20 ஆண்டுகளாக வரி ஏய்ப்பு செய்துள்ளார்.

ஹோட்டல் கடைக்கு உண்டான எவ்வித முறையான கட்டிட அனுமதி (Building plan approval) மற்றும் வரைபட அனுமதி (Layout approval) மற்றும் தீயணைப்பு துறையின் தடையில்லா சான்று (No objection certificate) அனுமதி பெறாமலும் இயங்கி வரும் ஹோட்டல் கடையை சீல் வைத்து உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இது சம்பந்தமாக புகார் அளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எந்தவித தற்காலிக ஆக்கிரமிப்புகளும் அகற்றப்படவில்லை. மேலும் எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாநகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுக்காத காரணத்தால், மாநகராட்சி ஆணையர் மீது Tamil Nadu Civil services (Discipline and Appeal) Rules படி, ஒழுங்கு நடவடிக்கையும் மற்றும் இதர சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும்படியும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஆக்கிரமிப்பு பற்றிய அனைத்துஆதாரங்களும் என்னிடம் உள்ளது" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவத்தின் 06.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கரூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) கரூர் மாநகராட்சி ஆணையர் தனது **02.05.2023** நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மனுதாரர் தனது புகாரில் குறிப்பிட்டிருந்த கட்டிடம் சுமார் 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட சுமார் 11.50 அடி x 23.50 அடி அளவில் AC sheet கூரையிலான மிகவும் பழைய கட்டிடம். இக்கட்டிடத்திற்கு வரைபடம் கேட்கப்பட்டதில் எதிர்மனுதாரர் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. கடைக்காரரான திரு.கே.எம்.வேலுச்சாமிக்கு அறிவிப்பு அனுப்பி விபரங்கள் கோரப்பட்டதில் கட்டிடதாரிடம் வரைபடம் இல்லை என தனது 25.04.2023ம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் இக்கட்டிடத்திற்கு சொத்துவரி விதிப்பு எண்.082/031/900097, கதவு எண்.26B(O). 17(N), காந்தி நகர், அண்ணாசாலை மேற்கு திரு.மு.பெருமாள் என்பவரின் பெயரில் வணிகபயன்பாட்டில் உள்ள வரியினை 31.03.2023 வரை வரி செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்படி ஹோட்டலுக்கு தொழில்வரி, திரு.எம்.வேலுச்சாமி டிபன் ஸ்டால், பசுபதி லே அவுட் என்ற பெயரில் தொழில் வரிவிதிப்பு எண். 082/031/900143–ல் தொழில்வரி செலுத்தியுள்ளார்.

மேற்கண்ட புகாருக்குரிய இடத்தில் திரு.கே.எம். வேலுச்சாமி என்பவர் ஹோட்டல் கடையினை வாடகைக்கு நடத்தி வருகிறார். ஹோட்டல் கடைக்கு முன்புறம் உள்ள மாநகராட்சி சாலையில் ஆக்கிரமிப்பு செய்திருந்த zinc sheet கூரையிலான செட் மாநகராட்சி அறிவிப்பு மூலம் 29.03.2023ல் அகற்றப்பட்டுவிட்டது. மேற்படி ஆக்கிரமிப்புதாரர் ஆக்கிரமிப்பு அகற்றிய ஒருசில தினங்களில் மீண்டும் செட் அமைத்து ஆக்கிரமிப்பு செய்தார். எனவே தெருவிலுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் காவல்துறையின் பாதுகாப்புடன் மாநகராட்சியின் மூலம் 26.04.2023 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. புகாரில் உள்ள கடையின் ஆக்கிரமிப்பு பகுதிகளும் முழுமையாக அகற்றப்பட்டது.

மேற்படி டிபன் ஸ்டாலுக்கு திரு.கே.எம்.வேலுச்சாமி பெயரில் Business Name. Tiffin Stall, Sub trade name, Canteen – other canteens, Registration No.082/01/12/23–24/0000900, Demand Notice No.082/2023/01/030/00113–ல் Trade License செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்திற்கு முறையான வரிவிதிப்புகள் செய்யப்பட்டுள்ளன. புகார் வந்தவுடன் மாநகராட்சி சார்பில் உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிக்கு புகார் வந்ததும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் புகார் தாரருக்கும் கரூர் மாநகராட்சிக்கும் எதிராக புகார் செய்யப்பட்டவர்களான திரு கே.எம்.வேலுச்சாமி மற்றும் இருவர் கரூர் மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தில் வழக்கு எண். O.S.No.86/2023 என்ற ஒரு சிவில் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று முறைமன்ற நடுவம் முறையீட்டு மனு எண்.72/C/2023–ல் மனுவில் உள்ள புகாரை தள்ளுபடி செய்து உரிய நீதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.06.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 26.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**4) மனுதாரர் 08.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

" கரூர் மாநகராட்சி 19வது வார்டில் சின்னாண்டாங்கோவில் சாலை, எம்.ஜி.ஆர். நகர், கௌரிபுரம் பகுதியில் உள்ள 40 அடி அகலமுள்ள சாலையில் சுமார் 10 அடி அகலத்திற்கு பல நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து அங்கு ஹோட்டல் கட்டி நடத்தி வந்தனர். மேற்கண்ட ஆக்கிரமிப்பு குறித்து கரூர் மாநகராட்சியில் புகார் செய்த பின்னர் கடந்த 2023 மார்ச் மாதத்தில் மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. ஆனால் அடுத்த ஒரு மாத காலத்திற்குள் மாநகராட்சி அலுவலர்களின் உதவியுடன் மீண்டும் தனி நபர்களால் மாநகராட்சி இடங்கள் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட மாநகராட்சி இடங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்து மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை விரைவில் அகற்றிடவும், மேலும் மேற்கண்ட இடங்களில் மீண்டும் ஆக்கிரமிப்பு தொடராதிருக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான ஆவண நகல்கள் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) கரூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் 15.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

" மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கரூர் மாநகராட்சி சின்னாண்டாங்கோவில் சாலை பகுதியில் உள்ள மாநகராட்சி இடத்தை ஆக்கிரமித்து ஹோட்டல் நடத்தி வந்த திரு.வேலுச்சாமி என்பவரால் ஓட்டலின் முன்பு போடப்பட்டிருந்த கூரை ஷெட் மாநகராட்சியின் மூலம் 29.03.2023 அன்று அகற்றப்பட்டது. ஒரு சில தினங்களில் மேற்கண்ட வேலுச்சாமி என்பவர் மீண்டும் இடத்தை ஆக்கிரமித்து கூரை ஷெட் போடப்பட்டதை அறிந்து அங்கு போடப்பட்டிருந்த மேற்கண்ட ஷெட் மற்றும் வேறு ஆக்கிரமிப்புகள் அனைத்தும் காவல்துறையின் உதவியுடன் 26.04.2023 அன்று அகற்றப்பட்டு விட்டது என்கிற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) இந்நேர்வில் மனுதாரரின் மனு, வாக்குமூலம், கரூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம், கரூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. அதில் பின்வரும் விவரங்கள் அறியப்படுகின்றன.

திரு.கே.எம். வேலுச்சாமி என்பவர் Trade License பெறாமலும் Professional Tax செலுத்தாமலும் ஹோட்டல் நடத்துவதாகவும், அந்த கடைக்கு முறையான கட்டட அனுமதி மற்றும் வரைபட அனுமதி பெறாமலும் கடந்த 20 வருடங்களாக வரி ஏய்ப்பு செய்துள்ளார் என

தெரிவித்துள்ளார். இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்த பிறகே, கடந்த 28.04.2023 அன்று License No. 082/023/01/030/000067 at License date 04.05.2023 கொண்ட Trade License Certificate கரூர் மாநகராட்சி அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிடும் கட்டடம் சுமார் 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட சுமார் 11.50 அடி x 23.50 அடி அளவில் AC sheet கூரையிலான மிகவும் பழைய கட்டிடம் இக்கட்டிடத்திற்கு வரைபடம் கேட்கப்பட்டதில் எதிர்மனுதாரர் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. கடைக்காரரான திரு.கே.எம்.வேலுச்சாமிக்கு அறிவிப்பு அனுப்பி விபரங்கள் கோரப்பட்டதில் கட்டிடதாரிடம் வரைபடம் இல்லை என தனது 25.04.2023ம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் இக்கட்டிடத்திற்கு சொத்துவரி விதிப்பு எண்.082/031/9000097, கதவு எண்.26B(O). 17(N). காந்திநகர், அண்ணாசாலை மேற்கு திரு.மு.பெருமாள் என்பவரின் பெயரில் வணிகபயன்பாட்டில் உள்ள வரியினை 31.03.2023 வரை வரி செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்படி ஹோட்டலுக்கு தொழில்வரி, திரு.எம்.வேலுச்சாமி டிபன் ஸ்டால், பசுபதி லே அவுட் என்ற பெயரில் தொழில் வரி விதிப்பு எண்.082/031/900143ல் தொழில்வரி செலுத்தியுள்ள விவரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது.

மேற்கண்ட புகாருக்குரிய இடத்தில் திரு.கே.எம். வேலுச்சாமி என்பவர் ஹோட்டல் கடையினை வாடகைக்கு நடத்தி வருகிறார். அந்த ஹோட்டல் கடைக்கு முன்புறம் உள்ள மாநகராட்சி சாலையில் ஆக்கிரமிப்பு செய்திருந்த Zinc Sheet கூரையிலான செட் மாநகராட்சி அறிவிப்பு மூலம் 29.03.2023ல் அகற்றப்பட்டுவிட்டது. மேற்படி ஆக்கிரமிப்புதாரர் ஆக்கிரமிப்பு அகற்றிய ஒரு சில தினங்களில் மீண்டும் செட் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். எனவே தெருவிலுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் காவல் துறையின் பாதுகாப்புடன் மாநகராட்சியின் மூலம் 26.04.2023 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளது. புகாரில் உள்ள கடையின் ஆக்கிரமிப்பு பகுதிகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

மேற்படி டிபன் ஸ்டாலுக்கு திரு.கே.எம்.வேலுச்சாமி பெயரில் Business Name. Tiffin Stall, Sub trade name. Canteen – other canteens, Registration No.082/01/12/23–24/0000900, Demand Notice No.082/2023/01/030/00113–ல் Trade License பெறப்பட்டுள்ளது என்பது ஆவணத்தின் மூலம் அறியமுடிகிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,

இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள ஆக்கிரமிப்புகள் காவல்துறை பாதுகாப்புடன் 26.04.2023 அன்று அகற்றப்பட்டுள்ளன இருப்பினும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியபின்னரே ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளதை ஆணையரின் அறிக்கை மூலம் தெளிவாகிறது. மேலும் Trade License 4.5.2023ல் பெறப்பட்டதற்கான ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் இதற்கு முன்னர் ஹோட்டல் நடத்திட Trade license முறையாக பெற்று வந்துள்ளாரா என்பது குறித்த ஆவணங்கள் மாநகராட்சியால் சமர்ப்பிக்கப்படவில்லை.

மேலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கட்டடம் 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட பழைய கட்டடம் என மாநகராட்சி குறிப்பிட்டு கடைக் காரரான திரு கே.எம்.வேலுச்சாமிக்கு அறிவிப்பு அனுப்பி விவரங்கள் கோரியதில் கட்டடதாரரிடம் வரைபடம் இல்லை என 25.04.2023 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார் என தெரிவித்து இக்கட்டடத்திற்கு 31.03.2023 வரை சொத்து வரி செலுத்தப்பட்டுள்ளது எனவும் தொழில் வரியும் செலுத்தப்பட்டுள்ளது என மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். திரு.வேலுச்சாமி ஹோட்டல் கடையை வாடகைக்கு நடத்தி வருவதாகவும் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் புகார் வந்தவுடன் மாநகராட்சி சார்பில் உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது என மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

மாநகராட்சி அலுவலர்கள் சரிவர களப்பணி செய்திருக்கும்பட்சத்தில் இவ்வாறான புகார்கள் வரவாய்ப்பில்லை. இது மாநகராட்சி அலுவலர்களின் கடமை தவறிய செயலாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் இதுபோன்ற அனுமதியற்ற கட்டடம், தொழில்கள் நடைபெறுகின்றதா என்பதை ஆய்வு செய்திட கரூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் மாநகராட்சி அலுவலர்கள் இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் மறுபடியும் தொடராதவாறு தொடர்ந்து கண்காணிப்புப்பணிகளை முறையாக தொடர்ந்து செய்ய வேண்டும். ஆக்கிரமிப்பு ஏதும் இல்லாத நகரமாக கரூர் மாநகராட்சியை ஆக்கிட தேவையான நடவடிக்கைகளை எடுத்திடவும், பல ஆண்டுகளாக கரூர் மாநகராட்சிக்கு தொழில் வரி, சொத்துவரி மற்றும் இதர இனங்கள் மூலம் வரவேண்டிய வருவாய் இழப்புக்கு காரணமாக இருந்துள்ள சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் கரூர் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் மாநகராட்சிகளில் ஆக்கிரமிப்பு நடைபெறாவண்ணம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாநகராட்சிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மணிகண்டன்,
   கதவுஎண்.69I/7E4,
   நான்காவது தெரு,
   பாரதிதாசன் நகர்,
   தாந்தோன்றிமலை,
   கரூர்.
2. ஆணையர்,
   கரூர் மாநகராட்சி,
   கரூர்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா.அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

4. இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்ப/ அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்